Source: *Tamil Murasu*, p2
Date: 20 July 2022

## செய்திக்கொத்து

# சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு புதிய தலைவர்



பேராசிரியர் டான் டாய் யோங் (படம்), சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் 2023ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி இந்தப் பொறுப்பை ஏற்பார்.

பேராசிரியர் டான், இதற்கு முன்னர் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் யேல்-என்யுஎஸ் கல்லூரித் தலைவராகப் பணியாற்றியவர்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டம் பெற்ற இவர், சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் கௌரவத் தலைவர், சிங்கப்பூர் நிறுவனர் நினைவிடக் குழுவின் துணைத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் உயர் பொறுப்புகளை வகிக்கிறார். முன்னாள் நியமன நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் டான் பல்வேறு தேசிய தின விருதுகளையும் பெற்றுள்ளார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.